# காலை முரசு

பக்கங்கள்:-25

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஐப்பசி 11 | செவ்வாய்க்கிழமை | 28.10.2025 | அதிர்வு 089


## மகனைக் கழுத்தறுத்து கொலை செய்து விட்டு தாயும் உயிர்மாய்ப்பு!

இளம்தாய்ஒருவர்தனதுமகனின்கழுத்தை அறுத்துப் படுகொலை செய்துவிட்டு, தானும் உயிர்மாய்த்துக் கொண்டுள்ளார். 07

## வெலிகம தவிசாளர் கொலைச் சம்பவம்:

# கைதான பிரதான துப்பாக்கிதாரி உட்பட எழுவரும் 72 மணி நேர தடுப்புக் காவலில்



வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் லசந்த விக்கிரமசேகர சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிரதான துப்பாக்கிதாரி உட்பட 7 சந்தேகநபர்களை 72 மணி நேர பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 22ஆம் திகதி பிரதேச சபை அலுவலகத்தில் வைத்து லசந்த விக்கிரமசேகர சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் தீவிரமாக மேற்கொண்டு வந்தனர்.

அதற்கமைய, இந்தக் கொலையின் பிரதான துப்பாக்கிதாரி உள்ளிட்ட 7 பேர் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களை மேலும் விசாரிப்பதற்காக, அவர்களுக்கு 72 மணி நேர பொலிஸ் தடுப்புக் காவல் அனுமதி நேற்று பெறப்பட்டுள்ளது.

# தமிழீழத்தை உருவாக்குவதே ஐ.நா.வின் பிரதான நோக்கம்

## அதற்கு அநுர அரசாங்கமும் துணை நிற்கின்றது என்றும் முன்னாள் கடற்படை அதிகாரி தசநாயக்க குற்றச்சாட்டு

**“இலங்கையில் மீண்டும் இனப்பிரச்சினை ஏற்படாமல் இருப்பதற்கு அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி தமிழீழத்தை உருவாக்குவதே ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கமாகும். அந்த நோக்கம் நிறைவேற்றப்படும் வரை ஒவ்வொரு ஐ.நா. கூட்டத் தொடரின் போதும் இராணுவம் உள்ளிட்ட முப்படையினர் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும். இந்த அரசும் ஐ.நா.வின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே பாடுபடுகின்றது.”**

**- இவ்வாறு ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரி ரியர் அட்மிரல் டி.கே.பி.தசநாயக்க தெரிவித்தார்.** 06



# அநுர அரசாங்கத்துக்கு எதிரான பேரணி குறித்து எதிர்க்கட்சி முக்கியஸ்தர்கள் இரகசிய சந்திப்பு!

## ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்கவில்லை

அநுர அரசுக்கு எதிராக எதிர்வரும் நவம்பர் 21ஆம் திகதி நுகேகொடையில் நடைபெறவுள்ள ”மாபெரும் மக்கள் குரல்” எதிர்ப்புப் பேரணி குறித்துப் கலந்துரையாடுவதற்காக, எதிர்க்கட்சிகளின் முக்கிய பிரமுகர்கள் மற்றும்பல்வேறுஅரசியல்கட்சிகளின்பிரதிநிதிகள் நேற்று திங்கட்கிழமை கொழும்பு – கொம்பனித் தெருவில் உள்ள பிரபல விருந்தகம் ஒன்றில் அவசர சந்திப்பை நடத்தினர்.

மிகவும் இரகசியமாக நடைபெற்ற இந்தச் சந்திப்பில், எதிர்வரும் நவம்பர் 21 பேரணி குறித்து 06







கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இடம் பெற்ற ஈ– விஸா மோசடி குறித்து வாசகர்கள் நன்கு அறிந்திருப்பார்கள். அது குறித்து பல தடவைகள் இப்பத்தியிலும், எங்கள் பத்திரிகையின் செய்திப் பகுதியிலும் விரிவாக வெளிப்படுத்தியிருக்கிறோம்.

உரிய கேள்விப் பத்திர நடைமுறைகள், ஒழுங்குகள் பின்பற்றப்படாமல், திடுதிப்பென இந்த ஈ–விஸா வழங்கும் அதிகாரம், அதிக கட்டணத்துடன் தனியார் நிறுவனம் ஒன்றுக்குத் தாரை வார்க்கப்பட்டது.

இது மோசடியான முறைமை என்று தெரிவித்து, ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி ஹக்கீம், பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகியோர் (மூவரும் அச்சமயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள்) உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனுத் தாக்கல் செய்தனர். மனுதாரர்களே தங்களின் மனுக்களின் சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையாகி வாதிட்டனர்.

அந்த வாதங்களை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் அந்த ஈ–விஸா நடைமுறையை 06



# நல்லூர் சூரன் போர்

வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் சூரன் போர் உற்சவம் நேற்று திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து மாலை 4 மணியளவில் வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்று ஆறுமுக பெருமான் ஆட்டுக்கடா வாகனத்தில் எழுந்தருளி சூரனை சம்ஹாரம் செய்தார்.

சூரன் போர் உற்சவத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு, ஆறுமுகப் பெருமானை வழிபட்டனர்.







## ஜகத் விதான எம்.பிக்கு எதிரான அச்சுறுத்தல்:

# பொலிஸ்மா அதிபர் விடுத்த அறிவிப்பு குறித்து சஜித் அணி கடும் அதிருப்தி!




நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் தொடர்பில் பொலிஸ்மா அதிபர் விடுத்துள்ள அறிவிப்பானது சுதந்திரமான பொலிஸ் சேவையின் இருப்பையே கேள்விக்குறியாக்கியுள்ளது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

"அரசியல் அல்லாத காரணங்களுக்காக நாடாளுமன்ற உறுப்பினருக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். அது என்னவென்று தெரியப்படுத்த வேண்டியது பொலிஸ்மா அதிபரின் பொறுப்பாகும்.

அவ்வாறு இல்லாமல் மறைமுகமாக அறிக்கை வெளியிடுவது பொதுமக்கள் சேவையில் ஈடுபட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினருக்கு செய்யப்படும் அவமதிப்பாகும். இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

பொலிஸ்மா அதிபரின் கூற்றில் வெளிப்படுவது முறைப்பாட்டாளரையும், பாதிக்கப்பட்டவரையும் குற்றவாளியாக மாற்றும் முயற்சியாகும்.

அரசின் பிரசாரத் திட்டத்துக்கு ஏற்ப பொலிஸ்மா அதிபரின் அறிக்கைகள் சுதந்திரமான பொலிஸின் இருப்பையே கேள்விக்குறியாக்கியுள்ளது.

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரங்களை பொலிஸ்மா அதிபருக்கு வழங்கி, பொலிஸ்மா அதிபர் நினைத்தபடி அறிக்கைகளை வெளியிட்டு மேற்கொள்ளும் இந்த நடவடிக்கைகளில் நாடு அடக்குமுறை பொலிஸ் அதிகார இருளின் நிழலாகவே நாங்கள் காண்கின்றோம்.

இந்த ஆபத்து அனைத்து ஜனநாயக அரசியல் நீரோட்டங்களில் ஈடுபடும் அனைவரின் கவனத்தையும் ஈர்க்க வேண்டும் என்பதை நாங்கள் சுட்டிக்காட்டுகின்றோம்.

சந்தேகநபர்களைக் கைது செய்வதை ஊடக சந்திப்பாக மாற்றும் பொலிஸ் நடவடிக்கைகள் மூலம் உண்மையான கேள்விகளை மறைக்க எடுக்கும் குறுகிய அரசியல் நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியான ஜகத் விதான நாடாளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்பு தொடர்பான தீர்மானத்தை குறைத்து மதிப்பிடுவதற்கு எதிராக நாங்கள் எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம்." - என்றுள்ளது.

# யாழ் நகரில் இலக்க தகடற்ற புதிய காரில் போதைப்பொருளைக் கடத்தியவர் கைது!



யாழ் நகரில் இலக்க தகடற்ற புதிய காரில்ஹெரோயின்போதைப்பொருளைக் கடத்திச் சென்ற நபரொருவர் நேற்று இரவு கைதுசெய்யப்பட்டார்.

யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 11கிராம் 600 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டு கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட கார் கைப்பற்றப்பட்டதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இந்த நபர் பிரபல வர்த்தகரின் மகன் எனவும் ஏற்கனவே ஹெரோயின் போதைப்பொருள் தொடர்பான வழக்கில் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டவரெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர் கைதிலிருந்து தப்புவதற்காக தமக்கு கையூட்டு வழங்க முயற்சித்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான சந்தேக நபரை மேலதிக விசாரணைகளுக்கு பின்னர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.





# ரூ. 20 இலட்சம் ஒப்பந்தத்தின் பிரகாரம் வெலிகம தவிசாளர் சுட்டுப் படுகொலை

## துப்பாக்கிதாரி கைதானது எப்படி? அதிகாரிகளின் இரகசிய வேட்டை

மாத்தறை மாவட்டம், வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் லசந்த விக்கிரமசேகர கடந்த 22ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் பிரதான துப்பாக்கிதாரி, 20 இலட்சம் ரூபாவுக்கான ஒப்பந்தத்தின் பேரில் இந்தக் கொலையைச் செய்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

“டுபாய் லொக்கா” என்ற நபர் இந்த ஒப்பந்தத்தைத் தனக்கு வழங்கினார் என்று துப்பாக்கிதாரி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்களில் சந்தேகநபர்கள் தப்பிச் செல்லும் காட்சிகள், அத்துடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர்கள் பிரிந்து செல்லும் காட்சிகள் சிசிரிவி கமராக்களில் பதிவாகியிருந்தன.

அதன் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்த நிலையில், கெகிராவ, பொனேகம பகுதியில் கைவிடப்பட்டிருந்த வீடொன்றில் மறைந்திருந்த பெண்ணொருவரும் இரு ஆண்களும் நேற்றுமுன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

எனினும், துப்பாக்கிதாரி என்று சந்தேகிக்கப்பட்ட நபர், பொலிஸாருடன் போராடித் தப்பிச் சென்றார்.

### துப்பாக்கிதாரி கைதானது எப்படி?

கெகிராவையில் இருந்து தப்பிச் சென்ற துப்பாக்கிதாரி கொழும்புக்கு வந்துள்ளமை தொலைபேசித் தரவுகள் மூலம் உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து, பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் இணைந்து கொழும்பின் பல பகுதிகளில் சோதனைகளை மேற்கொண்டனர்.

சந்தேகநபர் பொரளை, சஹஸ்புர பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்தபோது, தனது தோற்றத்தை மாற்றும் நோக்கில் தலைமுடியை வெட்டி, தனது உடைகளையும் மாற்றிக் கொண்டுள்ளார். அவர் அங்கு ஏதோ ஒரு போதைப்பொருளை உட்கொண்டார் என்றும் தெரியவந்தது.

மேலும், சந்தேகநபர் தனது கைபேசிக்கு மின்னேற்றம் செய்து கொள்வதற்காக அதனைத் தான் தங்கியிருந்த வீட்டின் உரிமையாளரிடம் கொடுத்திருந்தார். பொலிஸ் சோதனையின்போது, அந்தத் தொலைபேசி மீட்கப்பட்டதுடன் வீட்டின் உரிமையாளரும் கைது செய்யப்பட்டார்.

அதன் பின்னர், தொலைபேசித் தரவுகளின் கண்காணிப்பு மூலம், சந்தேகநபர் இராஜகிரிய பகுதிக்குச் சென்று மாலை 6 மணியளவில் மஹரகம, நாவின்ன பகுதிக்குச் சென்றமை தெரியவந்தது.

அதன்படி, பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் அரச புலனாய்வுப் பிரிவினரின் உதவியுடன் அவர் நேற்றுமுன்தினம் மாலை 6.45 மணியளவில் மஹரகம, நாவின்ன பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

### கொலைக்கான ஒப்பந்தம் மற்றும் பணப் பரிமாற்றம்

வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் லசந்த விக்கிரமசேகரவைக் கொலை செய்வதற்காக 20 இலட்சம் ரூபா பெறுமதியான ஒப்பந்தம் பேசப்பட்டுள்ளது

இந்த ஒப்பந்தம் பாதாள உலகக் குழு உறுப்பினர் “டுபாய் லொக்கா” என்ற நபரால் வழங்கப்பட்டுள்ளது என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஒப்பந்தத் தொகையில் 12 இலட்சம் ரூபா கடந்த 22ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஒன்றரை இலட்சம் ரூபா பணத்தைப் பெறுவதற்காகவே சந்தேகநபர் நாவின்ன பகுதிக்கு வந்தார் என்று தெரியவந்துள்ளது.

டுபாயில் இருந்து வந்த தொலைபேசி அழைப்பின் ஊடாக, நாவின்ன பஸ் நிலையத்துக்கு எதிரில் உள்ள குப்பைத் தொட்டியில் ஒன்றரை இலட்சம் ரூபா பணம் மறைத்து வைக்கப்பட்டுள்ளது என்று சந்தேகநபருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### துப்பாக்கிதாரியை பிடித்த சாமர்த்தியம்

நேற்றுமுன்தினம் மாலை 6:30 மணியளவில் அந்த இடத்துக்கு வந்த துப்பாக்கிதாரி, பணத்தை எடுத்துக் கொண்டு மீண்டும் மஹரகம நோக்கிச் செல்வதற்காக ஓட்டோவில் பயணித்துக் கொண்டிருந்தபோது, விசேட அதிரடிப் படையினர் மற்றும் அரச புலனாய்வுப் பிரிவினர் அவரைக் கண்காணித்தனர்.

மஹரகம நகரின் மையத்தில் உள்ள அரச மரம் அருகே சந்தேகநபரைக் கைது செய்ய முயன்றபோது, அவர் ஓட்டோவில் இருந்து குதித்து, போக்குவரத்து நெரிசலுக்கு மத்தியில் ஹைலெவல் வீதி வழியாக சுமார் 600 மீற்றர் தூரம் கொழும்பு நோக்கி ஓடி, அருகில் இருந்த வாகனத் திருத்துமிடத்துடனான வாகனத் தரிப்பிடமொன்றுக்குள் நுழைந்துள்ளார்.

அதன்போது, அங்கு இருந்த நபர்களின் உதவியுடன் பொலிஸ் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் மாலை 6:45 மணியளவில் அவரை மடக்கிப் பிடித்துக் கைது செய்தனர்.

### தனிப்பட்ட அடையாளங்கள்

கைது செய்யப்பட்ட சந்தேகநபரின் இடது கையில் முழங்கைக்குக் கீழ் “ஹிதுமதே ஜீவிதய” (இஷ்டப்படி வாழும் வாழ்க்கை) என்றும், வலது கையில் “அனுராதா” என்றும், மார்பின் இடது பக்கத்தில் மனைவியினுடையது எனக் கருதப்படும் பெயரையும் வலது பக்கத்தில் “சசந்தி துவ” (சசந்தி மகள்) என்றும் பச்சை குத்தியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# இலங்கையை வேகமாக ஆக்கிரமிக்கின்றது ‘ஏஐ’

## உலக வங்கி தகவல்




இலங்கை உட்பட தெற்காசியாவில் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு வேகமாக அதிகரித்துள்ளது என்று உலக வங்கி தனது அறிக்கையொன்றில் சுட்டிக் காட்டியுள்ளது.

தெற்காசியாவின் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு தொழிலாளர் சந்தையில் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

“தெற்காசியாவில் நேபாளம் மற்றும் இந்தியாவுடன் ஒப்பிடும்போது, அதிக செயற்கை நுண்ணறிவு பயன்படுத்துவோர் கொண்ட தொழிலாளர் சக்தியைக் கொண்ட நாடுகளாக பூட்டானும் இலங்கையும் மாறியுள்ளன.

ஆயினும் தெற்காசிய நாடுகளில் செயற்கை நுண்ணறிவை மனித நிரப்பியாக அதாவது மனித திறன்களுடன் தொழில்நுட்பத்தைச் சேர்ப்பதில் இலங்கை குறைந்த இடத்தில் உள்ளது. திறன்களை மேம்படுத்தாமல் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு விரைவுபடுத்தப்பட்டால் வேலை இழப்புகள் ஏற்படும்.

இலங்கையில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான வேலைவாய்ப்புச் சந்தை, தெற்காசியாவில் உள்ள மற்ற நாடுகளைவிட வேகமாக விரிவடைந்து வருகின்றது. 2025 ஆம் ஆண்டில் இலங்கையில் உள்ள அனைத்து தொழில்முறை மற்றும் நிர்வாக வேலைவாய்ப்பு அறிவிப்புகளில் 7.3 சதவீதத்துக்கு செயற்கை நுண்ணயிவு தொடர்பான திறன்கள் தேவைப்பட்டுள்ளன. இது பிராந்தியத்திலேயே அதிகபட்ச பங்காகும். இந்தியாவில் இது 5.8 சதவீதத்தைத் தாண்டுகின்றது.

இலங்கையின் நிதித் துறை, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்முறை சேவைகளுக்கு செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இலங்கையில் வலுவான செயற்கை நுண்ணறிவு வேலைவாய்ப்புச் சந்தை இருக்க வேண்டும்.

அதேவேளை, செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு காரணமாக தெற்காசியா முழுவதும் உள்ள வேலைவாய்ப்புகளில் சுமார் 7 வீதம் அதிக ஆபத்தில் உள்ளன. அழைப்பு மைய அதிகாரிகள், கணக்காளர்கள், ஒப்புநோக்குபவர்கள், கணினி மென்பொருள் போன்ற பணிகளுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்புகளில் ஏற்கனவே சரிவு காணப்படுகின்றது.” - என்றுள்ளது.

# பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக கட்டாயம் பிரேரணை முன்வைக்கப்பட வேண்டும்

## இப்படி மொட்டுக் கட்சி வலியுறுத்து

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி பிரேம்நாத் தொலவத்த வலியுறுத்தியுள்ளார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியிடமே அவர் இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார்.

வெலிகம பிரதேச சபைத் தவிசாளர் தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகச் சுட்டிக்காட்டி, உரிய பாதுகாப்பு கோரி பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம் எழுதி இருந்தார். எனினும், இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில் அவர் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.



இந்த விடயத்தைப் பிரதான காரணமாகக் கொண்டே மேற்படி நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட வேண்டும் என்றும் பிரேம்நாத் தொலவத்த சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், இது தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தமது நிலைப்பாட்டை இதுவரை அறிவிக்கவில்லை.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றுவதற்குரிய பெரும்பான்மை பலம் எதிர்க்கட்சி வசம் இல்லாத போதும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மீது நம்பிக்கை இல்லை என்பதை வெளிப்படுத்தவும், நாட்டில் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டவும் இந்தப் பிரேரணையை ஒரு கருவியாகப் பயன்படுத்தலாம் எனச் சில எதிரணி உறுப்பினர்கள் கருதுகின்றனர்.

அதேவேளை, சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்னெடுப்பதற்குரிய நகர்வுகளை ஐக்கிய மக்கள் சக்தி ஏற்கனவே ஆரம்பித்திருந்தமை தெரிந்ததே.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உடனடியாக நிறுத்தி, பழைய முறையை உடனேயே பின்பற்றும்படி இடைக்கால உத்தரவு ஒன்றை வழங்கியது.

ஆயினும் நீதிமன்ற உத்தரவை உதாசீனப்படுத்தி அல்லது புறக்கணித்து பழைய முறைமையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வராமல், தாங்கள் புதிதாக அறிமுகப்படுத்திய ஈ-விஸா முறைமையை குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தொடர்ந்தது. இது நீதிமன்ற அவமதிப்பு குற்றம் என்று சுமந்திரனும் மற்றைய இரு மனுதாரர்களும் உயர்நீதிமன்றத்தில் முறையிட்டமையை அடுத்து, அந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கை வழக்குத்தொடுநராக முன்னெடுக்கும் பொறுப்பை சுமந்திரனிடமே உயர்நீதிமன்றம் வழங்கியது. அந்த விசாரணையின் முடிவில் இலங்கை குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர்நாயகம் குற்றவாளியாகக் காணப்பட்டு அவருக்கு மூன்று வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமை தெரிந்த விடயம்தான்.

இப்போது, அப்படி இடையில் அறிமுகப்படுத்தப்பட்ட அந்த குளறுபடி முறையால் ஏற்பட்ட இழப்புக் குறித்து கணக்காய்வு அறிக்கை வெளியே வந்திருக்கின்றது.

2024 ஏப்ரல் 17ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் இரண்டாம் திகதி வரை மூன்றரை மாதங்களுக்கு மேல் இந்த முறைமை தொடந்தமையால் இலங்கை அரசாங்கம் 18 லட்சத்து 20 ஆயிரத்து 418 டொலர் (சுமார் 55 கோடி ரூபா) வருமானத்தை பெறும் வாய்ப்பை இழந்துள்ளது என்று கணக்காய்வுகள் தெரிவிக்கின்றன.

நிதி அமைச்சின் அங்கீகாரம் பெறாமல், ஈ-விஸா வழங்கும் முறைமையை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு கையளிக்கும் அமைச்சரவைப் பத்திரங்களைத் தயாரித்த அதிகாரிகள் உட்பட சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக துறை சார் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று இப்போது கணக்காய்வாளர் நாயகம் பரிந்துரைத்திருக்கின்றார்.

இத்தகைய முறைகேடு நடைமுறைக்கு வந்த உடனேயே அது தொடர்பில் நீதிமன்றத்தை நாடி, அப்போதைய அரசுக்கு எதிராகத் துணிச்சலாக சட்ட நடவடிக்கை எடுத்த சுமந்திரன், ஹக்கீம், பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகியோர் உண்மையில் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

அவர்கள் நீதிமன்ற நடவடிக்கை எடுக்காமல் விட்டிருந்தால், புதிய அரசு வந்து அதை கண்டு பிடித்து, இந்த நடைமுறையை நிறுத்துவதற்கு இடையில் மேலும் பல்லாயிரம் கோடி ரூபாவை நாடு இழந்திருக்கும்....!

* * *

வடக்கு மாகாணத்தில் உள்ள ஒரு மாவட்டச் செயலகத்திற்குள் ஓர் வன்முறைக் கும்பல் புகுந்து தாக்குதல் நடாத்தியபோதும் மாவட்ட நிர்வாகம் அது குறித்து பொலிஸுக்கு அறிவிக்காமல் மூடி மறைக்கின்றது – கமுக்கமாக அமுக்கி வாசிக்கின்றது – என்று அந்த அலுவலக அதிகாரி ஒருவர் குறிப்பிடுகின்றார்.

மாவட்டச் செயலாளரின் சாரதி ஒருவர் சாரதிகள் அலுவலகத்தில் இருந்து 'தண்ணி' போடுவது குறித்து மாவட்டச் செயலாளர் அறிந்திருந்தும் நடவடிக்கை எடுப்பதில்லை என்ற குற்றச் சாட்டும் உண்டு. அந்தச் சாரதி தினமும் தனது ஓட்டோவில் அலுவலகம் வந்து மாவட்ட அரச அதிபரின் வாகனத்திற்கு ஒதுக்கப்பட்ட தரிப்பிடத்தில் அதைத் தரித்து நிறுத்தி விட்டே தமது பணியில் ஈடுபடுகின்றாராம்.

அவர் ஒரு பெண்ணிடம் விட்ட சில்மிசம் காரணமாக அப்பெண்ணின் காதலனே மாவட்டச் செயலகத்திற்குள் புகுந்து சாரதியின் ஓட்டோவை அடித்து நொருக்கியுள்ளார் என்று விடயமறிந்த வட்டாரங்கள் நாசூக்காகத் தகவல் வெளியிடுகின்றன.

இந்த வன்முறை இடம்பெற்று நான்கு நாள்கள் கடந்துவிட்ட போதும் மாவட்ட நிர்வாகம் பொலிஸாருக்கு எந்தவொரு தகவலும் வழங்காமல், மூச்சே விடாமல் இருக்கின்றமை மேலும் சந்தேகத்தை ஏற்படுவதாக அந்த வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

'பாம்பின் கால் பாம்பறியும்' என்பார்கள். அதுபோல மாவட்டச் செயலாளரின் உள்ளாந்தங்கள் அவரின் சாரதிக்கு நன்கு தெரியும் என்பதால் இவ்விடயத்தில் சாரதியை நெருக்கடியில் ஆழ்த்தாமல் அமுக்கி வாசிப்பதற்கு மாவட்டச் செயலாளரும் துணை போகின்றாரோ என்று சில தரப்புக்கள் கேள்வி எழுப்புகின்றன. உண்மை வெளியே வந்தால் அப்போது வெளிப்படுத்தலாம்.

---

## தமிழீழத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"இம்முறை இடம்பெற்ற ஐ.நா. கூட்டத்தொடரில் அதிக மனித உரிமை மீறல்கள் இடம்பெற்ற நாடுகளின் பட்டியலில் இலங்கை இரண்டாவது இடத்தில் இருக்கின்றது என்று மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்திருந்தார்.

எவ்வாறிருப்பினும் அவரது உரையை வெளிவிவகார அமைச்சர் முற்றாக நிராகரித்தமை மகிழ்ச்சியளிக்கின்றது. ஆனால், அதன் பின்னரான அரசின் நிலைப்பாடுகளை அவதானிக்கும் போது இது தொடர்பில் இரு தரப்புக்கும் இடையில் ஏதேனும் தொடர்புகள் காணப்படுகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வலியுறுத்துவதைப் போன்று ரோம் பிரகடனம் கைச்சாத்திடப்பட்டால் அது ஒட்டுமொத்த பாதுகாப்பு படைகளையும் காட்டிக் கொடுப்பதற்குச் சமமாகும். பிரிவினைவாதிகளின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இன்னும் இரு மைல் கற்களை மாத்திரமே கடக்க வேண்டியுள்ளது. அதற்கான இரு ஒப்பந்தங்கள் கைசாத்திடப்பட்டால் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தக் கூடிய எல்லை வரை செல்ல முடியும்.

அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் நாட்டின் தேசிய பாதுகாப்பு பலவீனமடையும். வெளியகப் பொறிமுறைகளை ஏற்கப் போவதில்லை என இந்த அரசு கூறினாலும், சர்வதேச அழுத்தங்களை எம்மால் தவிர்க்க முடியாது. உண்மை மற்றும் நல்லிணை ஆணைக்குழு அமைக்கப்பட்டாலும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. எனவே, மீண்டும் இனப்பிரச்சினை ஏற்படுவதைத் தடுப்பதற்கு 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி தமிழீழத்தை உருவாக்குவதே ஐ.நா.வின் நோக்கமாகும்.

இந்த நோக்கம் நிறைவேற்றப்படும் வரை ஒவ்வொரு ஐ.நா. கூட்டத் தொடர் இடம்பெறும் போதும் தொடர்ச்சியாக எமக்கு இந்த நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும். விடுதலைப்புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டாலும், சர்வதேசத்துடனான அவர்களது தொடர்புகள் இன்னும் காணப்படுகின்றன.

அவர்களிடம் பலமும், பணமும் இருக்கின்றது. எனவே அவர்கள் இதனைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வார்கள். இதுஓயாதஅலையாகும். எனவே, ஐ.நா.வைப் போன்று நாமும் இடைவிடாது இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அவ்வாறில்லையெனில் அவர்களுக்கு ஈடுகொடுக்க முடியாது.

போரால் தோற்கடிக்கப்பட்ட ஒரு விடயத்தை மீண்டும் ஒப்பந்தம் மூலம் வெற்றி கொள்ள முயற்சிக்கின்றனர். இதற்கு எதிராகப் பாதுகாப்புப் படையினர் குரல் கொடுக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும். பாதுகாப்புப் படை மாத்திரமின்றி முழு நாடும் இதற்காக ஒன்றிணைய வேண்டும்.

புலம்பெயர் தமிழர்களிடம் நாம் உங்களுக்காக நிற்கின்றோம் என்பதைக் காண்பிப்பதற்காகவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு விஜயம் செய்தார். எதிர்காலநிதித்திரட்டலே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் நோக்கமாகும்.

ஏதோ ஒரு நோக்கத்துக்காக இந்த அரசு ஐ.நா.வின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக உறுதி பூண்டுள்ளது. வெளிவிவகார அமைச்சரும் அதற்கேற்பவே நாடாளுமன்றத்திலும் சில கூற்றுக்களை முன்வைத்துள்ளார். இதற்கு நாட்டு மக்கள் எதிர்ப்பை வெளியிட வேண்டும்." – என்றார்.

---

## அநுர அரசாங்கத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, ஒரு அரசியல் தலைவர், "மாபெரும் மக்கள் குரல் பேரணியை அரசம் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறது. எனவே, அதிகபட்ச ஒழுக்கத்துடன் இந்தப் பேரணியை நடத்த வேண்டும். ஏனெனில், அரசு இந்தப் பேரணியில் குழப்பங்களை ஏற்படுத்த முயலலாம்." என்று எச்சரித்தார்.

மற்றொரு தலைவர், "ஆம், அது உண்மைதான். மிகப் பெரிய மக்கள் கூட்டம் வரவிருப்பதால், மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதில் சம்பந்தப்பட்டவர்கள் மிக எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். மக்கள் கட்டுப்பாடுக் குறித்து எங்கள் அமைப்பாளர்களுக்கு நல்ல புரிதலை ஏற்படுத்த வேண்டும்." – என்று தெரிவித்தார்.

இடதுசாரி பாரம்பரிய அரசியல் கட்சியின் தலைவர் ஒருவர், "ஐக்கிய மக்கள் சக்தி நிச்சயமாகப் பங்கேற்கின்றதா?" என்று வினவினார்.

அதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஒருவர், "ஆம், நிச்சயமாகப் பங்கேற்கின்றது. இது தொடர்பாக கலந்துரையாட அண்மையில் நடந்த கூட்டங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தொடர்ந்து கலந்து கொண்டார்.

கடந்தவெள்ளிக்கிழமை இரவுதலவத்துகொடையில் யூடியூபர்கள் நடத்திய சந்திப்பிலும் சுஜீவ சேனசிங்க பங்கேற்றார். எனவே, ஐக்கிய மக்கள் சக்தி குறித்து எந்தப் பிரச்சினையும் இல்லை. சுஜீவ உள்ளிட்ட சிலர் எங்களுடன் ஒருங்கிணைப்புப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்." – என்று உறுதிப்படுத்தினார்.

இந்தச் சந்திப்பில், நுகேகொடை பேரணிக்கான ஊடகப் பிரசாரம் மற்றும் சமூக ஊடகப் பிரசாரப் பொறுப்புகளைப் பிரித்துக் கொள்வது குறித்தும் முடிவெடுக்கப்பட்டது.

இது குறித்து மேலும் கலந்துரையாட விரைவில் மற்றுமொரு சந்திப்பு நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் உதய கம்மன்பில, சாகர காரியவசம், மஹிந்த அமரவீர, தலதா அத்துகோரள, அநுர பிரியதர்ஷன யாப்பா, பிரசன்ன ரணதுங்க, டிரான் அலஸ், டி.வி. சானக, மொஹமட் முஸம்மில், அஜித் ராஜபக்ஷ, சஞ்ஜீவ எதிரிமான்ன, பிரேமநாத் சி. தொலவத்த, அசங்க நவரத்ன, சுகீஷ்வர பண்டார, சாகல ரத்நாயக்க உள்ளிட்ட பல அரசியல் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.







# பருத்தித்துறையில் சூரசம்ஹார நிகழ்வு

பருத்தித்துறை பர்வதவர்த்தனி சமேத பசுபதீசுவரல் கோவிலில் சூரசம் ஹார நிகழ்வு நேற்று மாலை சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

கந்தசஷ்டி விரதத்தின் 6ஆம் நாளான நேற்று மாலை 4.15 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்றது.

அதனைத்தொடர்ந்து, உள்வீதி வலம்வந்து மாலை 5.30 மணி அளவில் முருகப்பெருமான் ஆட்டுக்கடா வாகனத் திலேறி வெளிவீதி உலாவந்து சூரசங் ஹாரம் இடம்பெறது.

இதன்போது நூற்றுக்கணக்கான முருக பக்தர்கள் பங்கேற்று வழிபட்டிருந் தனர்.



# தனிமையில் வசித்து வந்த மூதாட்டி சடலமாக மீட்பு

வல்வெட்டித்துறை பகுதியில் தனி மையில் வசித்து வந்த மூதாட்டி ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த பிறேமச்சந்திரன் வதனராணி (வயது 73) என்பவராவார்.

வீட்டில் துர்நாற்றம் வீசிய நிலை யில். ஞாயிற்றுக் கிழமை இரவு சம்பவ இடத்துக்கு சென்ற கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணைகளை மேற் கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தர விட்டார்.

சாட்சிகளை வல்வெட்டித்துறை பொலி ஸார் நெறிப்படுத்தினர்.

மேற்படி பகுதியில் சில காலமாக தனி மையில்வசிப்பவர்கள்உயிரிழக்கும்நிலை யில் துர்நாற்றம் வீசிய பின்பே சடலமாக மீட்கப்படுவதாக மரண விசாரணை அதிகாரி தகவல் வெளியிட்டார்.

## மகனைக் கழுத்தறுத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சம்பவம் காலி, பட்டபொல – கஹட்டபிட்டிய பகுதியில் நேற்று இடம் பெற்றுள்ளது.

கொலை செய்யப்பட்ட மகன் மூன்றரை வயதுடையவர் எனவும், உயிரை மாய்த் துக் கொண்ட தாய் 24 வயதுடையவர் என வும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பெண், வெளிநாடொன்றுக் குப்பணிக்காகச்சென்றுசிலமாதங்களுக்கு முன்பு மீண்டும் நாடு திரும்பியுள் ளார்.

இந்தப் பெண்ணின் கணவர் அவரை விட்டுப் பிரிந்து சென்றுவிட்ட நிலையில், கொலை செய்யப்பட்ட மகன், பெண்ணின் தந்தையின் பொறுப்பிலேயே வளர்ந்து வந்துள்ளார்.

எவ்வாறாயினும், தனது மகனைக் கொலை செய்துவிட்டுத் தாயும் உயிரை மாய்த்துக் கொண்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ள னர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சாத்தியமற்ற தேர்தல்

இலங்கையில் மாகாண சபைத் தேர்தல் விவகாரம் 'பிள்ளையார் கல்யாணம் போல' நாளை நாளை எனத் தொடர்ந்து இழுபடப் போகின்றது என்பது பெரும்பாலும் நிச்சயமான விடயம்தான்.

இதுவரை இருந்த மாகாண சபை தேர்தல் சட்டங்களை இல்லாமலாக்கி எட்டு வருடங்கள் ஆகிவிட்டன. அதை - பழைய மாகாண சபைத் தேர்தல் ஒழுங்கு விதிகளை - மீண்டும் அப்படியே நடைமுறைப் படுத்தும் ஒரு சட்டத்தை குறுகிய காலத்தில் நிறைவேற்றி, மாகாண சபைத் தேர்தல்களை அடுத்த மூன்று மாதங்களுக்குள் நடத்தி முடிப்பதற்கான வாய்ப்புகள் தாராளமாக இருந்தபோதும் அதிகாரத்திலிருந்த அரசுத் தரப்புகள் - இப்போது இருக்கின்ற அரசு வரையில் - தங்களுக்கு சாதகமான அரசியல் சூழ்நிலை இல்லாத காரணத்தால் இந்தத் தேர்தலை நடத்தாமல் பின்னடித்து வருகின்றன.

தாங்கள் அதிகாரத்துக்கு வந்ததும் ஒரு வருடத்திற்குள் நிலுவையில் இருக்கும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி முடிப்போம் என்று மக்களுக்கு வாக்குறுதி வழங்கி, அதிகாரத்திற்கு வந்த அநுர குமார திஸநாயக்க தலைமையிலான அரசும் கூட, இது விடயத்தில் மக்களுக்கு கயிறு விடுகின்றது. தனக்கு சாதகமான அரசியல் சூழ்நிலை இல்லை, பின்னடைவான சூழ்நிலை இருக்கின்றது என்ற நிலைமை கருதி மாகாண சபைத் தேர்தல்களை அது தூக்கிக் குப்பைக் கூடைக்குள் கடாசி விட்டது.

எனினும் எதிர்க்கட்சி தரப்புகளில் இருந்து அழுத்தம் வருவதால், 'அடுத்த வருடம் மாகாண சபைத் தேர்தல்' என்ற 'குதிரை வண்டிலுக்கு முன்னாள் கரட் கட்டிய கதையை' அது மக்கள் முன் அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கின்றது.

ஆளும் தேசிய மக்கள் சக்தி கூட்டணியின் பிரதான பங்காளிகளான ஜே.வி.பியினர் இந்தத் தேர்தலை நடத்துவதற்கு எதிரான தீவிர நிலைப்பாட்டை எடுத்திருக்கிறார்கள் என்று கூறப்படுகின்றது.

அடுத்த வாரத்தில் நாட்டின் வரவு - செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க சமர்ப்பித்த பின்னர், அதற்குப் பின்பு வரும் வாரங்களில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது குறித்து ஆராய்வதற்காக சர்வ கட்சி மாநாடு ஒன்றை அவர் கூட்டுவார் என்று செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

மேலும் இந்தக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எல்லை நிர்ணயம் தொடர்பான புதிய சுற்றுக் கலந்துரையாடல்களும் தொடங்கப் படும். அதன் பிறகு, நாடாளுமன்றத்தில் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

மறுபுறம் மாகாண சபைத் தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்ற முடிவு செய்யப்பட்டாலும், அதற்கு எதிராக ஏதேனும் ஒரு தரப்பு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்குக் காத்துத் தயாராக இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அப்படிப் பார்த்தால் குறைந்தது இன்னும் ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்களுக்கு இந்தத் தேர்தல் நடப்பதற்கான வாய்ப்புகள் இப்போதைக்கு வரவே வராது என்பதுதான் நிலைமை.



# அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு தி.மு.க. கூட்டணிகள் அழைப்பு

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் என்ற பெயரில் தமிழக மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் சதித் திட்டத்துக்கு எதிராக போராடிட, முதல்வர் ஸ்டாலின் தலைமையில் நவம்பர் 2 ஆம் திகதி அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெறும் என்று தி.மு.க. கூட்டணி கட்சிகள் அறிவித்துள்ளன.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து தி.மு.க. கூட்டணி கட்சித் தலைவர்களுடன் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் நேற்று அறிவாலயத்தில் ஆலோசனை நடத்தினார்.

இந்தக் கூட்டத்துக்குப் பின் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் வெளியிட்ட அறிக்கையில்,

"மக்களாட்சி மாண்பைச் சிதைப்பதையும், ஜனநாயகத்தை சின்னாபின்னப் படுத்துவதையும் தொடர்ந்து தொய்வில்லாமல் செய்வதே ஒன்றிய பா.ஜ.க. அரசின் வழக்கமான பழக்கம் ஆகும். அதற்கு ஏற்ப தன்னாட்சி பெற்ற அமைப்புகளையும் தங்களது விருப்பத்துக்கு வளைத்து செயல்படுத்தி வருகிறது.

குறிப்பாக, தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் அனைத்தும் சர்ச்சைக்குரியதாக மட்டுமல்ல, சந்தேகத்துக்குரியதாக இருக்கின்றன. முறையான தேர்தல், வெளிப்படையான தேர்தல், நேர்மையான தேர்தல், உண்மையான தேர்தல் நடத்துவதுதான் தேர்தல் ஆணையத்தின் ஒரே பணியாகும். ஆனால் சமீப காலமாக தங்களுக்கு விருப்பமான உத்தரவுகள் மூலமாக சந்தேகத்துக்குரிய தேர்தலை தேர்தல் ஆணையம் நடத்தி வருகிறது. இதற்கு வெளிப்படையான உதாரணமாக பிஹார் தேர்தல் அமைந்துள்ளது.

இது தமிழ்நாட்டுக்கான பிரச்னை ஆகும். தமிழ்நாட்டின் அனைத்து அரசியல் இயக்கங்களும் இதனை உன்னிப்பாக கண்காணித்து தடுத்தாக வேண்டும். எனவே தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகள் பங்கேற்கும் அனைத்துக் கட்சிக் கூட்டம் நவம்பர் 2 – ஞாயிறு அன்று காலை 10.00 மணி அளவில், தியாகராய நகரில் உள்ள ஓட்டல் அகார்டில் நடைபெற இருக்கிறது. இதில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் அரசியல் வேறுபாடுகளை கடந்து பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

அந்தக் கூட்டத்தில் தலைவர்கள் வைக்கும் கோரிக்கைகள், ஆலோசனைகள் அடிப்படையில் நமது அடுத்த கட்ட செயல்பாடுகள் அமையும் என உறுதி அளிக்கிறோம். மக்களாட்சியையும், மக்களின் உரிமைகளையும், தமிழ்நாட்டின் எதிர்காலத்தையும் மனதில் வைத்து அனைத்து அரசியல் இயக்கங்களும் ஒன்று சேர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# மக்களிடம் சத்தியம் வாங்கி வாக்கு கேட்கின்றது தி.மு.க.

## சீமான் கடும் விமர்சனம்



தி.மு.கவினர் சாதனையைச் சொல்லி வாக்கு கேட்காமல், சத்தியம் வாங்கி வாக்கு கேட்கின்றனர் என நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கடுமையாக விமர்சித்துள்ளார்.

விடுதலைப் போராட்ட வீரர்கள் மருது சகோதரர்கள் குருபூஜையையொட்டி, நேற்று சிவகங்கை மாவட்டம் காளையார் கோவிலில் அவர்களது நினைவிடத்தில் சீமான் மரியாதை செய்தார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

"கட்சிகள் பிரிந்து கிடப்பதால் திமுக வெற்றி பெறும் என்று எப்படி கூற முடியும் ? அதை மக்கள்தான் முடிவு செய்ய வேண்டும். எந்தப் பிரிவும், குழப்பமும் இல்லாமல் நாம் தமிழர் கட்சி போட்டியிடுகிறதே, அது கட்சியாக உங்களுக்கு தெரியவில்லையா? திமுக ஆட்சிக்கு வந்தால் நாடு, நாடாக இருக்காது சுடுகாடாகத் தான் இருக்கும்.

20 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்படாமல் சாலையில் கிடப்பதாக விவசாயிகள் அழுது கொண்டிருக்கின்றனர். 75 லட்சம் இளைஞர்கள் வேலையில்லாமல் இருக்கின்றனர். ஆனால் திமுகவினர் வீடு, வீடாக சென்று தீபாவளி பரிசு கொடுத்து சத்தியம் வாங்கி வாக்கு கேட்கின்றனர். சாதனையைச் சொல்லி வாக்கு கேட்காமல், சத்தியம் வாங்கி வாக்கு கேட்கின்றனர்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஆப்கானிஸ்தான் மீது போர் தொடுப்போம்

## பாகிஸ்தான் பகிரங்க எச்சரிக்கை

ஆப்கானிஸ்தான் மீது நேரடியாகப் போர் தொடுப்போம் என பாகிஸ்தான் பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு இடையே அண்மையில் அதன் எல்லையில் மோதல் ஏற்பட்டது.

இதனையடுத்து கட்டார் மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் தலையிட்டு மத்தியஸ்தம் செய்தன.

அதன்படி, தோஹாவில் நடந்த முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையில் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் இடையே இணக்கப்பாடு எட்டப்பட்டு கடந்த 19 ஆம் திகதி போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதற்கிடையே பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் இடையே 2 ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தை நேற்று துருக்கியின் இஸ்தான்புல்லில் ஆரம்பமானது. எனினும் அதன் முதல் நாளில் எந்த உடன்பாடும் ஏற்படவில்லை.

இந்த நிலையில் இஸ்தான்புல்லில் ஆப்கானிஸ்தானுடன் நடந்து வரும் அமைதிப் பேச்சுவார்த்தைகளில் உடன்பாடு ஏற்படாவிட்டால் பாகிஸ்தான் வெளிப்படையான போரைத் தொடங்கும் என பாகிஸ்தான் பாதுகாப்புத்துறை அமைச்சர் கவாஜா ஆசிப் எச்சரித்துள்ளார்.



# சீனாவுக்கான 100 வீத வரி விதிப்பை கைவிடுவதாக அமெரிக்கா அறிவிப்பு





சீனாவுக்கான 100 சதவீத வரி விதிப்பை கைவிடுவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

தென் கொரியாவில் வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் இருவருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதையடுத்தே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

வரும் நவம்பர் முதலாம் திகதி முதல் அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் அனைத்து சீன பொருள்களுக்கும், 100 சதவீதம் கூடுதல் வரி விதிப்பதாக டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார்.

இந்தநிலையில், ஆசிய நாடான தென் கொரியாவின் ஜியாங்ஜு நகரில் ஏ.பி.இ.சி எனப்படும் ஆசிய – பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாடு ஒக்டோபர் 31 ஆம் திகதி மற்றும் நவம்பர் முதலாம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

இதனடிப்படையில், சீனாவுக்கு நூறு தவீத வரி விதிப்பை கைவிடுவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெ. முக்கிய நகரங்களில் விமான சேவைகள் பாதிப்பு

அமெரிக்காவின் முக்கிய நகரங்களில் விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தநிலையில், பத்திற்கும் மேற்பட்ட வெவ்வேறு விமான நிலையங்களில் சுமார் ஒரு மணி நேரம் வரையில் விமான சேவையில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இந்த விமான சேவைகளின் தாமதங்கள் தொடர்ச்சியாக மூன்றாவது வாரமாகவும் தொடர்வதாகவும் இதற்கு அமெரிக்க அரசாங்கத்தின் முடக்கமே இதற்கு காரணம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நியூ ஜெர்சியில் உள்ள நியூவார்க் லிபர்ட்டி சர்வதேச விமான நிலையம் நேற்று பிற்பகல் அமெரிக்க நேரப்படி அதிகாலை 12:59 மணி வரை தாமதமாக தரையிறங்கியுள்ளது.

சராசரியாக விமானங்கள் சுமார் 82 நிமிடங்கள் தாமதமாகியதாக மத்திய விமான போக்குவரத்து நிர்வாகத்தின் வலைத்தளம் தெரிவித்துள்ளது.

பாஸ்டனில், ஓடுபாதையில் ஒரு விமானம் செயலிழந்ததால் லோகன் சர்வதேச விமான நிலையத்தில் அமெரிக்க நேரப்படி மாலை 4:30 மணி வரை தரை நிறுத்தம் அறிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை 8:30 மணியளவில், பணியாளர் பற்றாக்குறை காரணமாக லாஸ் ஏஞ்சல்ஸ் சர்வதேச விமான நிலையத்தில் விமானங்கள் பாதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

கலிபோர்னியாவின் ஓக்லாந்தில் உள்ள ஓக்லாந்து சர்வதேச விமான நிலையமும் அந்த தரை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அமெரிக்க அரசாங்க முடக்கம் தொடர்வதால் சுமார் 13 ஆயிரம் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அதிகாரிகளும் மற்றும் சுமார் 50 ஆயிரம் போக்குவரத்துப் பாதுகாப்பு அதிகாரிகளும் சம்பளமின்றி வேலைசெய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வார இறுதியில் மேலும் அதிகமானோர் வேலைப்புறக்கணிப்பை மேற்கொள்ளும் அபாயம் காணப்படுவதாக அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளுக்குக் குடியரசுக் கட்சியும் மற்றும் ஜனநாயகக் கட்சியும் ஒன்றையொன்று மாறி மாறி விமர்சித்து வருகின்றன.

இந்தநிலையில், தொழிற்சங்கங்களும் விமான நிறுவனங்களும் பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாணும்படிக் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# முடத்தவ ஆற்றில் மூழ்கி ஒருவர் பலி

**(உடப்பு க.மகாதேவன்)**

ஆனமடுவ ரஸ்நாயக்கபுர பொலிஸ் பிரிவில் உள்ள முடத்தவ ஆற்றில் மூழ்கி ஒருவர் உயிரிழந்தார்.

இறந்தவர் மொன்னேக்குளம பகுதியைச் சேர்ந்த 68 வயதானவர் என தெரியவந்துள்ளது. இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இவர் குழாயைப் பயன்படுத்தி மீன் பிடிப்பவர் என்று கூறப்பட்டது. தொழிலுக்குச் சென்ற அவர் வீடு திரும்ப தாமதமானமையால் குடியிருப்பாளர்கள் அவரைத் தேடியபோது ஆற்றின் நடுவில் அவரது சடலம் காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் நிக்கவெரட்டிய வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளதுடன், ரஸ்நாயக்கபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தம்பசிட்டி மலையந்தோட்டம் முருகன் கோவிலில் கந்தசஷ்டி திருவிழாவின் 6 ஆம் நாள் வழிபாடுகள்





பருத்தித்துறை, தம்பசிட்டி மலையந்தோட்டம் அருள்மிகு முருகன் கோவிலில் கந்தசஷ்டி திருவிழாவின் ஆறாம் நாள் பூசை வழிபாடுகள் நேற்று திங்கட்கிழமை சிறப்பான முறையில் இடம்பெற்றது.

கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாளான நேற்றைய தினம் பி.பகல் 2.00 மணிக்கு அபிசேகம் ஆரம்பமாகி தொடர்ந்து பூசை வழிபாடுகள் இடம்பெற்று விரதகாரர்களுக்கு இளநீர் பிரசாதம் வழங்கி வைக்கப்பட்டது.

# தனிமையில் வசித்துவந்த வயோதிப பெண் மரணம்



யாழ்ப்பாணம், சுன்னாகம் ஆறுமுகம் வீதியில் உள்ள வீடு ஒன்றில் தனிமையில் வசித்த வயோதிப பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த நடராஜா சந்திரா (வயது-70) என்பவராவார்.

சடலம் காணப்படுவதாக கிடைத்த தகவலுக்கு அமைய நேற்று திங்கள் கிழமை (27) மாலை சம்பவ இடத்துக்கு சென்ற யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

சாட்சிகளை சுன்னாகம் பொலிஸார் நெறிப்படுத்தினர்.










# கிழக்குக் கடலில் பயணித்த கப்பலின் பணியாளர் ஒருவரை சிகிச்சைக்காக திருமலையில் தரையிறக்க உதவிய கடற்படை

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கொழும்பு கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தின் ஒருங்கிணைப்பின் கீழ், திருகோணமலைப் பகுதிக்கு அப்பால் கிழக்குக் கடலில் பயணித்துக் கொண்டிருந்த ஆஏ ஐலுமு என்ற சரக்குக் கப்பலின் மிகவும் நோய்வாய்ப்பட்ட பணியாளர் ஒருவர், இலங்கை கடற்படையின் உதவியுடன் அவசரமாக கரைக்குக் கொண்டுவரப்பட்டு, சிகிச்சைக்காக நேற்று ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

சிங்கப்பூரிலிருந்து இந்தியாவின் சென்னைக்கு பனமா கொடியுடன் பயணித்த சரக்குக் கப்பலான MV IYO-வில் இருந்த பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒரு பணியாளர் வயிற்று நோயால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார். அவசர சிகிச்சைக்காக நோயாளியைக் கரைக்குக் கொண்டு வர கடற்படையினரிடம் உதவி கோரி, கடற்படை தலைமையகத்தில் அமைந்துள்ள கொழும்பு கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்திற்கு கப்பலில் இருந்து பெறப்பட்ட அறிவிப்பை உடனடியாக ஏற்றுக்கொண்ட கடற்படை, கிழக்கு கடற்படை கட்டளையுடன் இணைக்கப்பட்ட ஒரு கடற்படை கப்பலை மருத்துவக் குழுவுடன் கடல் பகுதிக்கு உடனடியாக அனுப்பி, ஆபத்தான நிலையில் இருந்த நோயாளியை சிகிச்சைக்காக கரைக்கு கொண்டு வந்தது.

அதன்படி, கடற்படைக் கப்பலில் படுகாயமடைந்த பிலிப்பைன்ஸ் நோயாளியைப் பெற்ற பிறகு, அவர் உடனடியாக திருகோணமலை துறைமுகத்திற்கு அடிப்படை முதலுதவி சிகிச்சையுடன் கொண்டு வரப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

மேலும், கடற்படை தலைமையகத்தில் நிறுவப்பட்ட கொழும்பு கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தால் ஒருங்கிணைக்கப்பட்டு, இலங்கை கடல்சார் தேடல் மற்றும் மீட்பு மண்டலத்திற்குள் துன்பத்தில் உள்ள கடல்சார் மற்றும் மீனவ சமூகத்திற்கு நிவாரணம் வழங்க கடற்படை ஆயத்தமாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.





# வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு சென்ற நபர் ஒருவர் உயிரிழப்பு

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற ஆட்டோவில் சென்ற நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கட்டைவேலி கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த இரத்தினம் சிலம்புநாதன் (வயது 66) என்பவராவார்.

நேற்று திங்கள் கிழமை காலை வைத்தியசாலைக்கு சென்ற போது அவர் உயிரிழந்தார்.

இந்த மரணம் தொடர்பில் கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார்.

சாட்சிகளை நெல்லியடி பொலிஸார் நெறிப்படுத்தினர்.





# ஜிந்துப்பிட்டிக் கோயிலில் சூரசம்ஹாரம்

கொழும்பு ஜெயந்தி நகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் கந்த சஷ்டி மஹோற்சவத்தின் சூரசம்ஹார நிகழ்வு நேற்று திங்கட்கிழமை மாலை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ரகுராம குருக்கள் தலைமையில் நடைபெற்றது. படத்தில் சூரசம்ஹாரம் நடைபெறுவதையும் கூடிய பக்தர்களையும் காணலாம்.


















# தங்கக்கலை தோட்ட அலுவலகம் மூடப்படுவதை ஆட்சேபித்துத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

(மஸ்கெலியா விசேட நிருபர்)

ஹட்டன் பிளான்டேஷனின் நிர்வாகத்திற்குட்பட்ட தங்கக்கலை தோட்ட அலுவலகம் மூடப்பட்டு ஊவாக்கலை தோட்டத்திற்கு மாற்றப்படுவது தொடர்பாக தொழிலாளர்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, நேற்று காலை முதல் சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கேம்பிரி மேற்பிரிவு, கேம்பிரி கீழ்பிரிவு, தங்கக்கலை மேற்பிரிவு, கெல்சி தங்கக்கலை உள்ளிட்ட பிரிவுகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுத் தோட்ட முகாமையாளருடன் நடைபெற்ற கலந்துரையாடலில், அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்க பிரதிநிதிகள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்று தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைக்கு ஆதரவாக வலியுறுத்தினர்.

எனினும்,முகாமையாளரைஅழைத்து மக்கள் பிரதிநிதிகள் கலந்துரையாடிய போதிலும் நிர்வாகம் எந்தவிதமான சுமூகமான தீர்வுக்கும் இணக்கம் தெரிவிக்கவில்லை. இதனால் தொழிலாளர்கள் அதிருப்தியடைந்த நிலையில் வேலை நிறுத்தத்தை தொடர்ந்து முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

“தங்கக்கலை அலுவலகம் மூடப்பட்டு மாற்றப்படுவது எங்கள் வாழ்வாதாரத்துக்கும், பணியிட வசதிகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். நியாயமான தீர்வு கிடைக்கும் வரை வேலை நிறுத்தம் தொடரும்” எனத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

லிந்துலை பொலிஸ் அதிகாரிகளும் நேற்று சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டிருந்தனர்.

தொழிலாளர்கள் தங்களின் உரிமை, வேலை பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தைக் காக்கும் நோக்கில் உறுதியுடன் இந்த போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.











# கிண்ணியா நகர சபையின் தவிசாளருடன் கஜேந்திரகுமார் எம்.பி. நேற்றுச் சந்திப்பு

(ஏ.எச்.ஹஸ்பர்)

கிண்ணியா நகர சபையின் தவிசாளர் எம்.எம். மஹ்தி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குழுவினர் இடையேயான சந்திப்பு நேற்று கிண்ணியா நகர சபையில் இடம் பெற்றது.

இச்சந்திப்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், கிண்ணியா நகர சபையின் பிரதி தவிசாளர், உறுப்பினர்களான சனான் முகமட், நிஸார்தீன், ரசாட் முகமட், வேந்தன் மற்றும் தீசன் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின் போது கிண்ணியா நகர சபை தற்போது முகம் கொடுக்கின்ற சவால்கள், எதிர்கால வேலை திட்டங்கள், கழிவு முகாமைத்துவ நிலையப் பிரச்சினைகள் போன்ற விடயங்கள் சம்பந்தமாக விரிவான கலந்துரையாடல் இடம் பெற்றது.









# கிண்ணியாவின் குறிஞ்சாகேணிக்கான பாதைப் பயணம் பாதுகாப்பான படகுச் சேவை நேற்று முதல் தொடக்கம்

(எஸ்.கீதபொன்கலன்)

கிண்ணியா மற்றும் அதனைச் சுற்றியுள்ள பொதுமக்களுக்கு மிகவும் அவசியமான தேவையாக இருந்த, குறிஞ்சாக்கேணி கடல் நீர்ப்பரப்பில் பயணிப்பதற்கான படகுப்பாதையான “கங்கை“ என்ற பெயரிடப்பட்ட பாரிய படகுப் பாதையின் பயணம், நேற்று பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ராவால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

2021 நவம்பரில் பாடசாலை மாணவர்கள் உட்பட எட்டு விலைமதிப்பற்ற உயிர்களைக் காவு கொண்ட துயரமான கிண்ணியா படகு விபத்தைத் தொடர்ந்து. தற்போது இப்படகுப் பாதை சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படவுள்ள “கங்கை” என்ற இப்புதிய படகுப் பாதை, சவுதி அரேபிய அரசின் 1.05 பில்லியன் ரூபா நிதியுதவியுடன் இக்கடற்பகுதியில் கட்டப்படவுள்ள நிரந்தர பாலக்கட்டுமான நிர்மாணத்தின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. இப்படகுப் பாதை ரூபா 45 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

டொல்பின் மரைன் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் எட்வர்ட் ரூ கிறிஸ்டி (பிரைவேட்) லிமிடெட் என்ற இரண்டு தனியார் கம்பனிகளின் கூட்டு முயற்சியாக நிர்மாணிக்கப்பட்ட இந்தப்படகு பாதை, நவீன பொறியியல் நுட்பங்களுடன் வடிவமைக்கப்பட்டு முழுமையான உயிர்காக்கும் வசதிகளுடன் கூடிய பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மையை கொண்டதாக உள்ளது.

நிகழ்வில் பேசிய பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ரா –

“திருகோணமலை மாவட்டம் மற்றும் கிண்ணியா பிரிவுகளின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் என்ற முறையில்,நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட இந்தத் திட்டம் உயிர் பெறுவதைக் கண்டு நான் மிகவும் பெருமைப்படுகிறேன். இது நமது மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் நம்பகமான போக்குவரத்து முறையை உறுதி செய்கிறது. இது வெறும் உள்கட்டமைப்புத் திட்டம் மட்டுமல்ல. நம்பிக்கையை மீட்டெடுப்பது, பாதுகாப்பை உறுதி செய்வது மற்றும் இந்த நீர்நிலைகளைக் கடக்கும் ஒவ்வொரு குடிமகனின் கண்ணியத்தையும் நிலைநிறுத்துவதை உறுதிப்படுத்துகின்றது.”

“நாம் முன்னேறும்போது,கடந்த காலத்தை நினைவில் கொள்கிறோம். எதிர்காலத்தை குறித்து சிந்திக்கின்றோம். திருகோணமலை மாவட்டம் அனைவருக்கும் பாதுகாப்பானதாகவும்,சிறந்த ஒருங்கிணைப்பிற்குரியதாகவும்அமைய வேண்டும். மாவட்டத்தை அனைவருக்கும் சமவாய்ப்புகள் நிறைந்ததாக மாற்றுவதில் எமது அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது” என்று தமது உரையில் குறிப்பிட்டார்.





# கிண்ணியாவில் பெக்கோ இயந்திரம் நேற்று தடம்புரண்டு கடலில் விழுந்தது



(எச்.எம்.ஹலால்தீன்)

பெக்கோ இயந்திரம் தடம் புரண்டு கடலில் விழுந்த சம்பவம் கிண்ணியா குறிஞ்சாக்கேணியில் நேற்றுக் காலை 9.00 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

கிண்ணியாவுக்கும் – குறிஞ்சாக் கேணிக்கும் இடையிலான புதிய படகு பாதை சேவை ஆரம்ப வைபவ நிகழ் விலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

பாதையைக் கடலுக்குள் இறக்க பெக்கோ இயந்திரம் முற்பட்ட வேளையில் படகுப் பாதையின் வேகம் காரணமாக அந்த இயந்திரம் இழுபட்டு கடலில் விழுந்தது.

இச்சம்பவத்தில் சாரதி தெய்வாதீனமாக உயிர் தப்பி உள்ளார்.



# போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட பெண் வியாபாரி மட்டு. ஏறாவூரில் கைது!

(கனகராசா சரவணன்)

ஏறாவூர் பிரதேசத்தில் போதைப் பொருள் வியாபார விற்பனை நிலையமாக செயற்பட்டுவந்த வீடு ஒன்றை நேற்று முந்தினம் ஞாயிற்றுக்கிழமை முற்றுகையிட்ட பொலிஸார் பெண் வியாபாரி ஒருவரை 5,350 மில்லிக் கிராம்ஐஸ் போதை பொருளுடன் கைது செய்தமையுடன் அவரிடம் இருந்து 3 லட்சத்து 61 ஆயிரம் ரூபா பணத்தையும் கைப்பற்றியுள்ளனர். ஏறாவூர் பொலிஸார் இத்தகவலைத் தெரிவித்தனர்.

மாவட்டப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து ஏறாவூர் பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் அந்தப் பிரதேசத்திலுள்ள ஏறாவூர் முதலாம் பிரிவிலுள்ள கலைமகள் பாடசாலை வீதியில் உள்ள போதைப் பொருள் விற்பனை செய்து வந்த வீட்டை பொலிஸார் முறையிட்டனர்.

இதன் போது அங்கு வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த 56 வயதுடைய பெண் வியாபாரியை 5350 மில்லிக்கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பெண் நீண்டகாலமாக போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளார் எனவும், அவரை இன்று திங்கட்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுவருவதாகவுன் பொலிஸார் தெரிவித்தனர்.

# பாதாள உலகக் குழுவை ஒழிக்கும் போர்வையில் வளர்க்க முற்படாதீர்கள்!

## அநுர அரசுக்கு நாமல் எச்சரிக்கை

பாதாள உலகக் குழுக்களுக்கு முடிவு கட்டும் போர்வையில் மற்றுமொரு குழுவை வளர்ப்பதற்கு முற்பட்டால் இந்த அரசின் கதை முடிந்துவிடும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

“பாதாள உலகக் குழுக்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பது நல்லது. எனினும், இதற்குரிய நடவடிக்கை என்ற போர்வையில் மற்றுமொரு குழுவைக் கட்டியெழுப்ப முற்பட்டால் இந்த



நடவடிக்கை வெற்றியளிக்காது.

மற்றுமொரு குழுவை உருவாக்குவதற்கு அரசு முற்படுகின்றது என்பதையே அதன் செயற்பாடு வெளிப்படுத்துகின்றது. அவ்வாறு நடந்தால் அரசும் முடிந்துவிடும். எனவே, பாதாள உலகக் குழுக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

தமது பொறுப்பை மறந்து இந்த அரசு செயற்பட்டு வருகின்றது. இதற்குரிய பதிலடி அடுத்த தேர்தலில் வழங்கப்படும்.” – என்றார்.

# அநுர தலைமையில் நவ. 7 இல் விசேட அமைச்சரவைக் கூட்டம்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் எதிர்வரும் 7ஆம் திகதி காலை விசேட அமைச்சரவைக் கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

2026 ஆம் ஆண்டுக்கான தேசிய மக்கள் சக்தி அரசின் வரவு – செலவுத் திட்டம் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி நிதி அமைச்சர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதியின் வரவு – செலவுத் திட்ட உரைக்கு அனுமதி பெறுவதற்காக விசேட அமைச்சரவைக் கூட்டம் நடக்கவுள்ளது.



ஜனாதிபதியின் வரவு – செலவுத் திட்ட உரை 2ஆம் வாசிப்பாகக் கருதப்படும். 2 ஆம் வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் மாதம் 8 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை நடைபெறும். 14 ஆம் திகதி மாலை 2ஆம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடத்தப்படும்.

அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் நவம்பர் மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகும்.

வரவு – செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி நடைபெறும்.

தேசிய மக்கள் சக்தி அரசின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் அரச மொத்த செலவீனமாக 4 ஆயிரத்து 434 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

# போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் பத்து மாதங்களில் 2 இலட்சம் வழக்குகள்!

இந்த ஆண்டின் ஜனவரி முதலாம் திகதி முதல் கடந்த 22ஆம் திகதி வரையான சுமார் 10 மாத காலப் பகுதியில் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக இலங்கையில் ஒரு இலட்சத்து 87 ஆயிரத்து 672 வழக்குகள் நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தக் காலப்பகுதியில் பாதுகாப்புப் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட ஒரு இலட்சத்து 91 ஆயிரத்து 320 சுற்றிவளைப்புகளில், போதைப்பொருள் தொடர்பில் ஒரு இலட்சத்து 90 ஆயிரத்து 938 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த



நடவடிக்கையில் 60 இலட்சத்து 19 ஆயிரத்து 343 இற்கும் அதிகமானவர்கள் சோதனையிடப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் வகைகளில் 2 ஆயிரத்து 539.5 கிலோவுக்கும் அதிகமான ஐஸ் கைப்பற்றப்பட்டு, அவை தொடர்பாக 66 ஆயிரத்து 593 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆயிரத்து 482.8 கிலோகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டு 58 ஆயிரத்து 130 வழக்குகளும், 14 ஆயிரத்து 434.4 கிலோகிராம் கஞ்சா மற்றும் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டு 58 ஆயிரத்து 724 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

32.6 கிலோகிராம் கொக்கெய்ன் கைப்பற்றப்பட்டு 91 வழக்குகளும், 30 இலட்சம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டு 2 ஆயிரத்து 808 வழக்குகளும், 575 கிலோகிராம் வேறு போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டு ஆயிரத்து 474 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

# போதைப்பொருள் ஒழிப்பில் மிக இறுக்கமான நடவடிக்கை வடக்கு மாகாணத்தில் தேவை

## சமூகமட்ட அமைப்புக்கள் வலியுறுத்து

போதைப்பொருள் ஒழிப்பு தேசிய வேலைத்திட்டம் எதிர்வரும் வியாழக் கிழமை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று சமூக மட்ட அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

நாட்டில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள்கள் தாராளமாகப் புழக்கத்தில் விடப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டுள்ள சமூக மட்ட அமைப்புக்கள் கடந்த கால அரசுகள் அது தொடர்பில் எடுக்க விரும்பாதிருந்தன என்றும் சுட்டிக்காட்டியுள்ளன.




தற்போதைய அரசு போதைப்பொருள் ஒழிப்பில் கூடிய கரிசனையைக் கொண்டுள்ளது. தெற்கில் போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பாக காத்திரமான நடவடிக்கைகள் அரசால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. வடக்கில் போதைப் பொருள் தொடர்பான கைதுகள் முன்னெடுக்கப்பட்டாலும், போதைப் பொருள் பரவலின் சூத்திரதா ரிகள் கண்டறியப்பட்டு கைது செய்யப்படுவதுடன், போதைப்பொருள் வலையமைப்புக்களை முற்றாக ஒழிக்கும் வகையிலான காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள் அபாய வலயங்களாக உள்ள பகுதிகளில் விசேட போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதேநேரம், பாடசாலை மாணவர்கள், உயர்தர மாணவர்களை இலக்குவைத்து நடக்கும் போதைப் பொருள் விற்பனைகளை ஒடுக்குவதற்குரிய நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும்.

போதைப்பொருள் ஒழிப்பு தேசிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், வடக்கு மாகாணத்தில் கூடுதலான அவதானம் செலுத்தி போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சமூக மட்ட அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.





# வவுனியா - அரசடிக்குளம் வித்தியாலயத்தில் சிமாட் வகுப்பறைக்கான அடிக்கல் நாட்டல்

**(கி.வசந்தன்)**

வவுனியா, பாவற்குளம் படிவம் 03, அரசடிக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்திற்கான சிமாட் வகுப்பறைக்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. மைதான புனரமைப்பு பணிகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜெகதீஸ்வரனால் நேற்று வேலைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் 23 லட்சம் ரூபா செலவில் இந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பாடசாலை அதிபர் திருமதி மனோகரன் கேதீஸ்வரி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், செட்டிகுளம் பிரதேச சபை உறுப்பினர்களான இசையாஸ் மிறால், தர்மபாலன் மற்றும் கிராம சேவையாளர் அஸ்லம், பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.










# வவுனியா கந்தசாமி ஆலயத்தில் மிக பக்திபூர்வமாக சூரசம்ஹாரம்

(கி.வசந்தன்)

வவுனியாவில் பிரசித்தி பெற்ற வவுனியா கந்தசாமி ஆலயத்தில் பக்தர்கள் புடைசூழ சூரசம்ஹார நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

தமிழ்க் கடவுளான முருகப்பெருமானின் அருளைப் பெறுவதற்காக சைவ மக்கள் அனுஷ்டிக்கும் விரதங்களில் மிக முக்கிய விரதமாக கந்தசஷ்டி விரதம் விளங்குகின்றது.

கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாளான நேற்றையதினம் முருகன் ஆலயங்களில் சூரன்போர் இடம்பெற்றது.

அந்த வகையில் வவுனியாவின் சிறப்பு மிகு வவுனியா கந்தசாமி ஆலயத்தில் மேளதாள வாத்திய இசை முழங்க, அந்தணச் சிவாச்சாரியர்கள், ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ ஆலயத்தில் இருந்து வெளி வீதிக்கு வந்த வந்த முருகப் பெருமான் மணிக்கூட்டு கோபுர சந்தி உள்ளடங்கிய ஏ9 வீதியில் சூரனுடன் போர் செய்து சூரனை வதம் செய்து பக்த அடியார்களுக்கு அருள்பாலித்தார்.

இதேவேளை, வவுனியா தாண்டிக்குளம் முருகன் கோவில், நெளுக்குளம் முருகன் ஆலயம், கோவில்குளம் அகிலாண்டேஸ்வரர் ஆலயம், பழனி முருகன் ஆலயம் உட்பட வவுனியா மாவட்டத்தில் உள்ள பல ஆலயங்களில் சூரசம்காரம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.


















# தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் நடக்கும் குறும்படப் போட்டி பற்றி விளக்கம்

தேர்தல் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் 'ஒரு வாக்கின் சக்தியின் கதைகள்' என்ற தலைப்பில் நடைபெறும் குறும்படப் போட்டி – 2025 தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் இ.சசீலன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையினரின் பங்கேற்புடன் விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.

குறும்படத்திற்கு கதை எழுதுவது எப்படி, புகைப்பட கருவி நுட்பங்கள் மற்றும் காணொளி செம்மையாக்கம், கையடக்க தொலைபேசியை பயன்படுத்தி குறும்படத்தை எப்படி உருவாக்குவது, செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி குறும்படங்களை எவ்வாறு தயாரிப்பது உள்ளிட்ட பல விடயங்கள் மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

இதன்போது யாழ் மாவட்ட பாடசாலைகளில் ஊடக கற்கைகள், நாடகம் அரங்கியல் கற்கை மாணவர்கள், ஆிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஜனநாயக விழுமியங்களை மேம்படுத்துவதையும், ஆக்கப்பூர்வமான வெளிப்பாடு மூலம் தேர்தல் செயல்பாட்டில் இளைஞர்களின் பங்கேற்பை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டு, இலங்கைத் தேர்தல் ஆணையம் 'ஒரு வாக்கின் சக்தியின் கதைகள்' எனும் குறும்படப் போட்டியை இந்த ஆண்டு ஏற்பாடு செய்துள்ளது.

திறந்த பிரிவு மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான பிரிவு என இக் குறும்பட போட்டியானது இரண்டு பிரிவுகளாக நடைபெற உள்ளது. இதற்கான தயாரிப்புக்களை சமர்ப்பிக்க வேண்டிய இறுதி திகதி நவம்பர் 14 ஆகும். தேர்தல் ஆணைக் குழுவின் இணையத்தளம் ஊடாக மேலதிக விவரங்களை அறிய முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.












# ‘அனிமேஷன்’ - இன்றைய உலகில் ஒரு பன்முகப் பலன் தரும் ஊடகம்

## *இன்று சர்வதேச அனிமேஷன் தினம்*

சர்வதேச ‘அனிமேஷன்’ துறை உலகின் பல்வேறு துறைகளிலும் ஆழமான மற்றும் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு பன்முக ஊடகமாக வளர்ந்துள்ளது. தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சியுடன், அனிமேஷன் உலகளாவிய தகவல் தொடர்பு, கல்வி, பொருளாதாரம் மற்றும் சமூக விழிப்புணர்வு ஆகிய தளங்களில் இன்றியமையாத பங்களிப்பை வழங்குகிறது.

**உலகளாவிய தொடர்புகளுக்குப் பாலம்**

அனிமேஷனின் மிக முக்கியமான சாதகமான அம்சம் அதன் மொழி மற்றும் கலாச்சாரத் தடைகளைத் தாண்டி தகவல் தொடர்பு கொள்ளும் திறன் ஆகும். அனிமேஷன் என்பது அடிப்படையில் ஒரு காட்சி மொழி. இது சிக்கலான கதைகள், நுட்பமான உணர்ச்சிகள் மற்றும் பிராந்தியக் கலாசாரச் சிறப்புகளை வசனங்களின் துணையின்றிப் பார்வையாளர்களுக்குக் கடத்த உதவுகிறது. ஜப்பானிய ‘அனிமே’ முதல் மேற்கத்திய அனிமேஷன் திரைப்படங்கள் வரை, இந்தப் படைப்புகள் உலகெங்கிலும் உள்ள பார்வையாளர்களை இணைத்து, சர்வதேச நல்லிணக்கத்தையும், பரஸ்பர கலாச்சாரப் புரிதலையும் மேம்படுத்துகின்றன. பல்வேறு நாடுகள் தங்கள் தனித்துவமான கலை வடிவங்களை உலகிற்குப் பகிர இது உதவுகிறது.

**கல்வி மற்றும் அறிவுப் பரிமாற்றத்தில் புரட்சி**

அனிமேஷன் கல்வித் துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. பாரம்பரிய வகுப்பறை கற்பித்தல் முறைகளைக் கடந்து, அனிமேஷன் கடினமான மற்றும் நுட்பமான கருத்துக்களை எளிமையான மற்றும் கவர்ச்சியான காட்சிகளாக மாற்றுகிறது. உதாரணமாக, மனித உடலின் செயல்பாடு, சிக்கலான இயந்திரங்களின் இயக்கம் அல்லது வரலாற்று நிகழ்வுகளின் காலவரிசை போன்றவற்றை 3D அனிமேஷன் மூலம் கற்பிக்கும்போது, மாணவர்கள் அவற்றை எளிதில் புரிந்துகொள்வதுடன், நினைவில் வைத்திருக்கவும் முடிகிறது. இது மாணவர்களின் கற்றல் அனுபவத்தை மிகவும் சுவாரஸ்யமாக்கி, தகவல் தக்கவைப்பு திறனைஅதிகரிக்கிறது. மேலும், மருத்துவ மற்றும் பொறியியல் போன்ற துறைகளில், அனிமேஷன் அடிப்படையிலான உருவகப்படுத்துதல்கள் பாதுகாப்பான மற்றும் செலவு குறைந்த பயிற்சி முறைகளை வழங்குகின்றன.

**பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்பின் ஆதாரம்**

சர்வதேச அனிமேஷன் துறை இன்று பல பில்லியன் டொலர் மதிப்புள்ள ஒரு தொழில்துறை ஆகும். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி மட்டுமல்லாமல், வீடியோ கேமிங், விஷுவல் எஃபெக்ட்ஸ், மெய்நிகர் உண்மை மற்றும் விளம்பரம் போன்ற துறைகளிலும்

தொடர்ச்சி▼

# ‘அனிமேஷன்’ - இன்றைய உலகில் ஒரு பன்முகப் பலன் தரும் ஊடகம்

### இன்று சர்வதேச அனிமேஷன் தினம்

தொடர்ச்சி▲

அனிமேஷன் பயன்பாடு மிகப்பெரிய அளவில் உள்ளது. இது உலகெங்கிலும் உள்ள இளைஞர்களுக்குப் பெரிய அளவிலான வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது. அனிமேட்டர்கள், கதைசொல்லிகள், மாடலர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் இயக்குநர்கள் எனப் பல்லாயிரக்கணக்கானோரை இத்துறை தன்னகத்தே கொண்டுள்ளது. குறிப்பாக, இந்தியா போன்ற நாடுகள் வெளிநாடுகளுக்கு அனிமேஷன் மற்றும் வி.எவ்.எக்ஸ் சேவைகளை வழங்கி, தங்கள் பொருளாதாரத்திற்குப் பெரும் பங்களிப்பைச் செய்கின்றன.

**சமூக விழிப்புணர்வு மற்றும் வணிக உத்தி**

பொழுதுபோக்குத் தளத்தைத் தாண்டி, அனிமேஷன் ஒரு சக்திவாய்ந்த சமூக விழிப்புணர்வுக் கருவியாகவும் செயல்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையும் பல்வேறு அரசுகளும் காலநிலை மாற்றம், பொதுச் சுகாதாரம் மற்றும் மனித உரிமைகள் போன்ற முக்கியமான சமூகப் பிரச்சினைகள் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்ட அனிமேஷனைப் பயன்படுத்துகின்றன. அதன் கவர்ச்சியான தன்மை காரணமாக, இது பொதுமக்களின் கவனத்தை எளிதில் ஈர்த்து, செய்தியை ஆழமாகப் பதிய வைக்கிறது. வணிக உலகில், அனிமேஷன் செய்யப்பட்ட விளக்க வீடியோக்கள் வாடிக்கையாளர்களுக்கு ஒரு நிறுவனத்தின் தயாரிப்பை விரைவாகவும், தெளிவாகவும், மறக்க முடியாத விதத்திலும் அறிமுகப்படுத்த உதவுகின்றன. இது விற்பனை ஈர்ப்பு விகிதத்தை அதிகரிப்பதில் சாதகமாகப் பங்களிக்கிறது.

சர்வதேச அனிமேஷன் தினம் கொண்டாடப்படுவது அனிமேஷன் கலையின் வரலாற்றுச் சிறப்பைக் குறிப்பதுடன், இன்றைய உலகில் அதன் பரவலான சாதகமான தாக்கத்தை எடுத்துரைக்கிறது. இது கற்பனை, தொழில்நுட்பம் மற்றும் கலாசாரம் ஆகியவற்றை ஒன்றிணைத்து, கல்வி கற்பிக்கும், வணிகத்தை மேம்படுத்தும் மற்றும் சமூக மாற்றத்தைத் தூண்டும் ஒரு சக்திவாய்ந்த ஊடகமாகும். இந்தத் துறையின் எதிர்காலம், செயற்கை நுண்ணறிவு (AI) போன்ற புதிய தொழில்நுட்பங்களுடன் இணைந்து, இன்னும் பல ஆக்கப்பூர்வமான மற்றும் சாதகமான வழிகளில் உலகிற்குப் பங்களிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றைய உலகில், அனிமேஷன் என்பது வெறும் பொழுதுபோக்கு ஊடகமாக மட்டுமல்லாமல், நிலைத்த உலகத்தை நோக்கிய நமது பார்வையைச் செதுக்கும் சக்திவாய்ந்த கருவியாகவும் பரிணமித்துள்ளது. சிக்கலான சுற்றுச்சூழல் சவால்கள், சமூக சமத்துவமின்மை, மற்றும் பொருளாதார நிலைப்புத்தன்மை போன்ற கருத்துகளை அனிமேஷன் மூலம் எளிமையாகவும், ஈர்க்கக்கூடிய வகையிலும் காட்சிப்படுத்த முடிகிறது. எடுத்துக்காட்டாக, பருவநிலை மாற்றத்தின் அபாயங்கள், புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் முக்கியத்துவம் அல்லது கழிவு மேலாண்மையின் செயல்முறைகள் போன்றவற்றை அனிமேஷன் குறும்படங்கள், ஆவணப்படங்கள் அல்லது விளக்கப்படங்கள் மூலமாகக் காட்சிப்படுத்தும்போது, அது பரந்த மக்கள் மத்தியில் குறிப்பாக இளம் தலைமுறையினரிடையே ஆழமான புரிதலையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்துகிறது.

கல்வி மற்றும் தகவல் தொடர்பில் அனிமேஷன் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. மரபு வழிப் பாடப்புத்தகங்களில் விளக்க முடியாத அல்லது கற்பனை செய்ய முடியாத சில செயல்முறைகளையும், காட்சிகளையும் இது உயிர்ப்பிக்கிறது. சூரிய சக்தி எவ்வாறு மின்சாரம் உற்பத்தி செய்கிறது, காடுகளின் அழிவு எவ்வாறு பல்லுயிர்களைப் பாதிக்கிறது அல்லது ஒரு தனிநபரின் சிறிய செயல்பாடுகள் எவ்வாறு பூமியின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் போன்ற கருத்துகளை அனிமேஷன் தெளிவாக விளக்குகிறது. இதனால், நிலைத்தன்மைக்கான தீர்வுகளைப் பற்றிய ஆக்கபூர்வமான உரையாடலைத் தூண்டுகிறது. இந்த காட்சி ஊடகம் மொழி, கலாச்சாரம் மற்றும் வயது எல்லைகளைக் கடந்து மக்களைச் சென்றடைவதால், நிலைத்த உலகத்திற்கான கூட்டுப் பொறுப்பை ஊக்குவிப்பதில் இது முக்கியப் பங்காற்றுகிறது.




நிலைத்த உலகத்தை உருவாக்குவதில் அனிமேஷன் கலைஞர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களின் படைப்பாற்றல் இன்றியமையாதது. அவர்கள் வெறும் தகவல்களை வழங்குபவர்களாக மட்டுமல்லாமல், நிலைத்தன்மைக்கான புதிய எதிர்காலத்தைக் கனவு காண்பவர்களாகவும் இருக்கின்றனர். அனிமேஷன் கதைகள் மூலமாக, மாசுபாடு இல்லாத நகரங்கள், வளமான இயற்கைச் சூழல் மற்றும் சமூக நீதியுடன் வாழும் மக்கள் போன்ற சிறந்த எதிர்காலத்தை அவர்கள் காட்சிப்படுத்துகிறார்கள். இத்தகைய காட்சிகளைப் பார்ப்பது, மக்களை வெறுமனே அச்சப்படுத்தாமல், மாறாக நம்பிக்கையையும் செயலில் ஈடுபடும் உத்வேகத்தையும் அளிக்கிறது. கற்பனை செய்யப்பட்ட அந்த நிலைத்த உலகத்தை நிஜமாக்க வேண்டும் என்ற எண்ணத்தை மக்களிடையே அது விதைக்கிறது.

அனிமேஷன் என்பது இன்று ஒரு நிலைத்த உலகத்தை நாம் பார்ப்பதற்கும், அதைப் புரிந்துகொள்வதற்கும், அதை உருவாக்க உழைப்பதற்கும் உதவுகிறது. சுற்றுச்சூழல் விஞ்ஞானிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் தங்கள் செய்திகளை உலகளாவிய பார்வையாளர்களிடம் திறம்பட கொண்டு செல்ல அனிமேஷனை ஒரு பாலமாகப் பயன்படுத்துகின்றனர். அது ஒரு கருத்தை விளக்குவதாயினும், ஒரு தீர்வைக் கற்பனை செய்வதாயினும், அல்லது உணர்வுகளைத் தூண்டுவதாயினும், அனிமேஷன் அதன் தனித்துவமான காட்சி மொழியால் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான பயணத்தில் நம் அனைவரையும் ஒன்றிணைக்கிறது. அனிமேஷன் மூலம், நாம் ஒரு பொறுப்பான, சமமான மற்றும் வளமான உலகைக் காணவும், உருவாக்கவும் முடியும் என்பதில் ஐயமில்லை.

- கோபாலகிருஷ்ணன் யாழினிப்ரியா -
(ஊடகக் கற்கைகள்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

# இன்றைய ராசி பலன்கள்- 28.10.2025




இன்றைய நாள் நீங்கள் விரும்பத்தக்கதாக இருக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். இன்று பயனுள்ள திட்டங்களை தீட்டுவீர்கள். அது உங்களுக்கு சாதகமான பலன்களைத் தரும்.

உங்கள் பணியில் சாதகமான பலன்கள் கிடைக்கும். அதிகப்படியான பண வரவு ஊக்கத்தொகையாக கிடைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.




இன்றைய நாள் சுமூகமாகவும் வெற்றிகரமாகவும் அமைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்த வேண்டும். ஸ்ரீலட்சுமி நரசிம்மரை வணங்குவதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும்.

இன்று உங்களுக்கு வெளியிலிருந்து ஊக்கம் கிடைக்காது. உங்களை நீங்களே ஊக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். திட்டமிட்டு செயலாற்றுவதன் மூலம் பணிகளை குறித்த நேரத்திற்கும் முடிப்பீர்கள். எதிர்பாராத வகையில் வரும் பணிகளையும் முடிப்பீர்கள்.

உறவு என்று வரும் போது நீங்கள் அதனை லேசாக கையாள வேண்டும். அன்பும் புரிந்து கொள்ளுதலும் உறவை சிறப்பாக்கும்.

பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற




இன்றைய நாள் பயனுள்ளதாக இருக்காது. என்றாலும் வருத்தப்படுவதை குறைத்துக் கொண்டு, உங்களுக்கு விருப்பமான விஷயங்களுக்காக நேரத்தையும் திறமையையும் பயன்படுத்துங்கள்.

தியானப் பயிற்சி சிறந்தது. குழப்பங்களுக்கு இடம் கொடாமல் தெளிவாக எண்ண வேண்டும்.

உங்கள் நாளை திட்டமிட்டு பணியாற்றுங்கள். பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் அன்றாட பணிகளுடன் வேறு பணிகளையும் ஆற்றுவீர்கள்.

உங்கள் உணர்சிகளை முறையாக கட்டுப்படுத்த வேண்டும். இதனால் உறவுப் பிணைப்பு பாதிக்கப்படும்.

இன்று அதிர்ஷ்டமான நிதிநிலைமை காணப்படாது. பணம் சம்பாதிக்கும் திறமையை வளர்த்துக்




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி உங்களுக்கு சாதகமாக அமையும் நாள். மிகவும் அற்புதமான நாள். உங்கள் முடிவெடுக்கும் திறமையில் முன்னேற்றம் காணப்படும். உங்களிடம் உறுதி காணப்படும்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை சிறப்பான நிலையில் இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கப்பெறுவீர்கள். உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் கருத்துக்களை உங்கள் துணையுடன் இனிமையான முறையில் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் பராமரிக்கப்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும்.

இன்று மொத்தத்தில் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். இன்று பொறுமை அவசியம். இன்று உங்கள் பொறுப்புகள் அதிகமாக காணப்படும்.

பணியிடத்தில் பரபரப்பு காணப்படும். திட்டமிட்டு முன்னுரிமைப்படி பணியாற்றினால் எல்லாப் பணிகளையும் எளிதாக முடிக்கலாம்.

ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அன்பை பரிமாறிக் கொள்வது, அதுவும் கஷ்ட நேரங்களில் பரிமாறிக் கொள்வது உறவில் மிகவும் அவசியம். அவர் விரும்பும் வகையில் நடந்து கொள்வது சிறந்தது.

சிறு கடன்கள் மூலம் உங்கள்அடிப்படை தேவைகளை எளிதாக சமாளிக்கலாம். உங்களிடம் அதிக பணம் இல்லாவிட்டாலும் இருக்கும் பணத்தில் எப்படி வாழ வேண்டும் என்று அறிந்திருப்பீர்கள்.




ஆன்மீக சொற்பொழிவுகள் கேட்டல் மற்றும் அடிக்கடி கோவிலுக்கு செல்வது மனதிற்கு ஆறுதல் தரும்.முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். தியானம் மேற்கொள்வது சிறந்த பலனைத் தரும்.

செயல்களை திட்டமிட வேண்டும் மற்றும் அதன்படி முடிக்க வேண்டும். அப்பொழுதான் அவை உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும், தேவையற்ற செயல்கள் செய்வதை தவிர்க்க முடியும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். உறவு சம்பந்தமான விருப்பு வெறுப்புகளைப் பற்றி உங்கள் துணையிடம் பேசி தெரிந்து கொள்ள வேண்டும். அதனால் நல்ல புரிந்துணர்வும் உறவுப் பிணைப்பில் வலுவும் ஏற்படும்.

பயணத்தின் போதும் பணத்தை கையில் கொண்டு




நீங்கள் அதிகப்படியாக செயலாற்றினால் வெற்றியைக் காண நேரலாம். உங்களின் நகை மற்றும் விலை மதிப்புள்ள பொருட்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். எச்சரிக்கையாக இருப்பதன் மூலம் பாதகமான விளைவு களை தவிர்கலாம்.

இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். நீங்கள் சாதாரணமாக செய்வதை விட இன்று கூடுதலாக செயல் பட வேண்டும். என்றாலும் திட்டமிட்டு செயலாற்றினால் நீங்கள் நன்மை காணலாம். பணியின் தரத்தில் கவனம் தேவை. வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். உங்கள் அன்பும் அரவணைப்பும் உங்கள் இருவருக்குமான உறவை வளர்க்க உதவும்.




இன்று இனிமையான சாதகமான நாள். இன்று நல்ல பலன்களைக் காண்பீர்கள். இன்றைய நாளை முறையாக திட்டமிடவும். முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

நீங்கள்எந்தப் பணி செய்தாலும் அதில் இன்று வெற்றி கானபீர்கள்.

உங்கள் பணியைக் கண்டு உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் பேசி அளவளாவுவீர்கள். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு நடந்து கொள்வீர்கள். ஒருவரின் கருத்துக்கு மற்றவர் மதிப்பு அளிப்பீர்கள்.

பணம் அபரிமிதமாக காணப்படும். அதனை உங்களின் நலனுக்கு பயன்படுத்துவீர்கள். பணத்தை சிறந்த முறையில் செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள்- 28.10.2025




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் அக்கம் பக்கத்தவரின் ஆதரவு கிடைக்கும். இன்று அனைத்தும் சிறப்பாக நடக்கும். இன்று நல்ல பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உங்களை பாராட்டுவார்கள். உங்கள் கடின உழைப்பு மற்றும் திறமை வெளிச்சத்திற்கு வரும்.

உங்கள் துணையுடன் விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ள வேண்டிய நேரம். இதில் நீங்கள் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

வெளி நாட்டிலிருந்து பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு தேவைப் படும் பொழுது அந்தப் பணம் கிடைக்கும்.




இன்று சிறப்பான பலன்கள் கிடைக்காது. என்றாலும் அமைதியாக செயல்களை கையாண்டால் சரியாக செயலாற்றலாம். செயல்களை பொறுமையுடன் கையாளுங்கள்.

இன்று முன் கூட்டியே திட்டமிடலும் அதன்படி நடந்து கொள்வதும் கடினமாக இருக்கும். பணிகளை சரியான விதத்தில் கையாண்டால் சுமை குறைவாகத் தெரியும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இது மறக்க முடியாத நாளாக இருக்கும். இருவருக்கும் இடையே நல்ல பிணைப்பு ஏற்பட இருவரும் அனுசரித்து நடந்து கொள்வீர்கள். நல்ல வார்த்தைகளை பரிமாறிக் கொள்வதன் மூலம் இன்றைய நாளை சிறந்ததாக ஆக்கலாம்.




இன்று இறை வழிபாட்டில் ஈடுபடுங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடுங்கள்.

பணியிடத்தில் திட்டமிட்டு வேலை செய்தால் பலன் கிடைக்கும். உங்களின் நேர்மறையான அணுகுமுறை காரணமாக அதிகப் பணிகளையும் எளிதாக கையாள்வீர்கள்.

உங்கள் துணையிடம் பேசும் போது புரிந்துகொண்டு பொறுமையாக பேச வேண்டும். உங்கள் வார்தைகள் தவறாகப் புரிந்து கொள்ள வாய்ப்புளதால் கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் அன்பாகப் பழகுவதன் மூலம் நேர்மறையான விளைவுகள் காணலாம்.

நீங்கள் அதிகமாக செலவு செய்வீர்கள்.




நீங்கள் மகிழ்ச்சியாக காணப்படுவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். வெற்றியின் உச்சத்திற்கு செல்வீர்கள்.

உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். உங்கள் முயற்சி பாராட்டைப் பெறும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணி சிறியதாக இருந்தாலும் அதனை மகிழ்வுடன் சிறந்த முறையில் செய்வீர்கள்.

இன்று உங்களுக்கும் உங்கள் துணைக்கும் மிகவும் இனிமையான மகிழ்ச்சியான நாள். இருவரும் ஒருவரோடொருவர் நேரம் ஒதுக்கி கலந்து பேசலாம். அதே சமயத்தில் அமைதியைக் கையாள வேண்டும்.

இன்று கணிசமான பணம் சேமிப்பீர்கள். பங்கு வர்த்தகத்தின் மூலம் நல்ல பலன் கிடைக்கும்.

# வேலணைப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படும் கட்டடங்களுக்கு சபையின் அனுமதி அவசியம்

## தவறினால் பாரபட்சமின்றி சட்ட நடவடிக்கை என தவிசாளர் அறிவிப்பு!

வேலணைப் பிரதேச சபையின் ஆளுகைக்குள் எந்தவொரு தரப்பினரும், கட்டடங்களை நிர்மாணிக்கும் போது பிரதேச சபையின் சட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப அனுமதிபெற்று கட்டடங்களை நிர்மாணிக்க வேண்டும் என தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

அண்மைக் காலமாக பிரதேச சபையின் ஆளுகைக்குள் பல்வேறு கட்டுமானங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

இதில் பல முறையான அனுமதி பெற்று நிர்மாண வேலைகளை முன்னெடுக்கவில்லை என தகவல்களூடாக உறுதிசெய்ய முடிகின்றது.

இவ்வாறு முறையான அனுமதி பெறாது நிர்மாணிக்கப்படும் கட்டுமானங்கள் சட்டமுறையற்ற கட்டுமானங்கள் என்றே கருத்தில் கொள்ளப்படும்.

அத்துடன் அவ்வாறு அடையாளப் படுத்தப்படும் கட்டுமானங்கள் மீது சட்ட



ரீதியான நடவடிக்கை எடுக்க பிரதேச சபை நிர்ப்பந்திக்கப்படும் நிலையும் உருவாகும்.

எனவே 1987 ஆம் ஆண்டு 15 இலக்க பிரதேச சபைகள் சட்டம் மற்றும் 1978 ஆம் ஆண்டு 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் –

01. பிரதேச சபையில்.கட்டட அனுமதிக்கான விண்ணப்பத்தை பெற்றுக் கொள்ளல்.

02. அமைவுச் சான்றிதழ் அல்லது கால நீடிப்பு அனுமதியை பெறுதல்.

03. காணி உப பிரிவிடல் மற்றும் காணி ஒருங்கிணைத்தல் அனுமதியினை பெற்றுக்கொள்ளல்.

04. நிலுவையிலுள்ள அனைத்து விண்ணப்பங்களுக்குமான அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பித்தல் போன்ற நடைமுறையை பின்பற்றி கட்டடங்களுக்கான நிர்மாண அனுமதியை பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

இதே நேரம் அனுமதியின்றி அமைக்கப்படும் கட்டுமாணங்களால் அண்மைக்காலத்தில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றி பல முரண்பாடுகளை எது உருவாக்கி வருவதால் இந்த நடைமுறையை வேலணை பிரதேச ஆளுகைக்குள் கட்டுமானங்களை மேற்கொள்வோர் பின்பற்றுவது அவசியமாகும் என்பதுடன் அவ்வாறு பின்பற்ற தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்க பிரதேச சபை நிர்ப்பந்திக்கப்படும். – என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.